திரு. எம். ஏ. ஜெயவேலு ; (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) தற்பொழுது அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Buildings of Metropolitan Magistrates Courts at Madras.

* Q. No. 10—Thiru R. E. CHANDRAN JEYAPAL: Will the Hon. the Minister for Law, be pleased to state whether the Government have any proposal for providing more spacious court halls for the sitting and holding of court by the Metropolitan Magistrates at Egmore, George Town and Saidapet?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தற்பொழுது எழும்பூரிலுள்ள பெருநகர் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவது குறித்த செயற் குறிப்பு ஒன்றிறு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆனால் ஜார்ஜ் டவுன் மற்றும் சைதாப்பேட்டை பெருநகர் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களுக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கான எந்தச் செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ரா. எ. சந்திரன் ஜெயபால்: பேரவைத் . தலைவர் அவர்களே, எழும்பூரிலே உள்ள மாநகர நடுவர் நீதி மன்றத்திலே கூடுதலான கட்டிடங்கள் கட்டப்படும் என்று அமைச்சரின் செயலர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி அமைக்கின்றபொழுது அங்கே வழக்கறிஞர்களுக்கு நல்ல அறைகள் அமைக்கப்படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. எம்.ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): வழக்கறிஞர் அங்கே தங்குவதற்கும், இடம்கொடுப்ப தற்காக, அந்தத் திட்டத்திலே இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால், அங்கே கட்டிடம் கட்டும்போது, வழக்கறிஞர்களுக்கும் இடம் ஒதுக்கப்படும்.

திரு. அ. செல்வராசன்: ஜார்ஜ் டவுன் கோர்ட் எனது தொகுதியைச் சேர்ந்ததாகும். எந்தக் காலத்தில் அந்தக் கோர்ட்டைக் கட்டினார்களோ தெரியாது, இப்பொழுது பல்லாயிரக்கணக்கான வழக்குகள் அங்கே செல்கின்றன. அதுவும் மதுவிலக்கு சம்பந்தமான வழக்குகள் அங்கே அதிகம் இருக் கின்றன. அங்கே பெண்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். ஆகவே, பெரிய இடமாக, வேறு இடத்திலாவது கட்டிடம் கட்ட அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

1980 பிப்ரவரி 2]

திரு. எம்.ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): அதுவும் பரிசீலிக்கப்பட்டது. ஆனால், இட நெருக்கடியைவிட நிதி நெருக்கடி அதிகமாக இருந்த காரணத்தாலே, தற்பொழுது அது ஒத்தி வைக்கப்பட்டது.

திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் போல், மற்ற இடங்களிலும் கட்டிடங்கள் கட்ட அரசுக்கு உத்தேசம் உண்டா? அவற்றைக் கட்டுகின்ற பொழுது, வழக்கறிஞர்களுக்கும் அறை கட்டுகின்ற உத்தேசம் உண்டா? அதைப்போல் எத்தனை கோர்ட்டுகளுக்குக் கட்ட உத்தேசம் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தனியாகக் கேள்வி போடவும். தற்பொழுது என்னிடம் புள்ளி விவரம் இல்லை.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, சென்னை நகரிலே அதிக வழக்குகள் சைதாப்பேட்டை கோர்ட்டிலே தான் வருகின்றன. அங்கு அதிக இட நெருக்கடி, ஆகவே, அதை விரிவுபடுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): நிதிநிலை நெருக்கடி காரணமாக அத்தகைய திட்டம் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையினாலே, கூடிய விரைவிலே அதுபற்றி பரிசிலிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எழும்பூர் கோர்ட் விஸ்தரிப்புத் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் அதன் மதிப்பீடு எவ்வளவு? மற்றொன்று-நம்முடைய மாண்புமிகு அமைச்சரின் செயலருக்கே தெரியும் ஓடாத கடிகாரம், கால் ஒடிந்துபோன நாற்காலிகள்தான் அங்கே இருக்கின்றன. எனவே, சென்னை உயர்நீதி மன்றம் மூலமாக, முதலிலே தேவையான ஃபர்னிச்சர்ஸுக்கு, உட்கார நாற்காலி போன்றவற்றிற்கு, கடிகாரங்கள் சரியான வகையில் நேரத்தைக் காட்ட நடவடிக்கைகள் எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அங்கே வருகின்ற குற்றவாளிகளுக்கு-அக்யூஸ்ட்-தங்குவதற்கு ஷெட்டுகள் அமைக்க அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 9-50]

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவரவர்களே, உறுப்பினர் கோரிக்கை நிச்சயமாகப் பரிசிலிக்கப்படும்.